

ஒசூர் வனப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அரிய வகை சாம்பல் நிற அணிலை படத்தில் காணலாம்.

ஒசூர் மண்டல காடுகளில்

# அரிய வகை சாம்பல் நிற அணில்கள் கண்டு பிடிப்பு

ஒசூர்,ஜுலை.17-ஒசூர் மண்டல காடுகளில் அரிய வகை சாம்பல் நிற அணில்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## அபூர்வ வகை அணில்கள்

தமிழ்நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர், கேரளா மாநிலத்தில் சின்னாறு கர்நாடகாவில் காவிரி ஆகிய காடுகளில் சாம்பல் நிற அணிகள் காணப்படுகின்றன. அபூர்வ வகையான இந்த அணில்கள் தற்போது ஒசூர் வனப்பகுதியில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒசூர் மற்றும் தர்மபுரி வனப்பகுதிகள் மேலகிரி என்று அழைக்கப்படுகின்றன. இந்த பகுதியில் கேன்ஸ் குழுவினர் உயிர் பிரிவு ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதில் ஆசிய இயற்கை பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த மலை அணில் ஆராய்ச்சியாளர்கள் உடன் சென்றனர்.

## மலை அணில்கள்

அவர்கள் நடத்திய ஆராய்ச்சியில், அங்கு சாம்பல் நிற அணில்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றை அந்த குழுவினர் படமும் எடுத்துள்ளனர். ஒசூர் வன மண்டலம் உரிகம் சரகம் உகினியம் வன பகுதியில், ஒரே இடத்தில் 3 சாம்பல் மலை அணில்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் அதிக அளவில் மாடுகள் மேய்ப்பதாலும், மாட்டு கொட்டகைகள் அமைப்பதாலும் ஆள் நடமாட்டம் போன்ற காரணத்தாலும் இந்த அணில்களுக்கு இடையூறாக இருப்பதாக கூறப்படுகிறது.

எனவே ஒசூர் மற்றும் தர்மபுரி உள்ளடக்கிய பல வகையான தாவரங்கள், அபூர்வ வன உயிரினங்கள் வாழும் மேலகிரி வனப்பகுதி விரைவில் தமிழ்நாடு காவிரி சரணாலயமாக அறிவிக்க வேண்டும் என்று கேன்ஸ் அமைபபு கேட்டுக் கொண்டுள்ளது.

**GGS Published in Dinathanthi news paper at krishnagiri district section. Dated on July 17th 2011.**